இனிமையான குழந்தைகளே! இங்கே நீங்கள் மனிதனிலிருந்து தேவதையாவதற்காக டியூசன் எடுப்பதற்காக வந்திருக்கின்றீர்கள். சோழியிலிருந்து வைரமாகிக் கொண்டிருக்கின்றீர்கள்.

கேள்வி: குழந்தைகளாகிய உங்களுக்கு இந்த படிப்பில் எந்த செலவும் இல்லை, ஏன்?

பதில்: ஏனென்றால் உங்களுடைய தந்தையே டீச்சராக இருக்கிறார். தந்தை குழந்தைகளிடம் கட்டணம் எப்படி வாங்குவார்? தந்தையின் குழந்தையாகி மடியில் வந்துவிட்டால் சொத்துக்கு உரிமையாளர் ஆகிவிடுகிறோம். குழந்தைகளாகிய நீங்கள் சோழியிலிருந்து வைரம் போன்ற தேவதையாகின்றீர்கள். பக்தியில் தீர்த்த யாத்திரைகள், தான புண்ணியங்கள் செய்வதால் செலவுகள் தான். இங்கே தந்தை குழந்தைகளுக்கு இராஜ்ய பதவி கொடுக்கின்றார். அனைத்து ஆஸ்தியும் இலவசமாக கொடுக்கின்றார். தூய்மையாக மாறுங்கள், ஆஸ்தியை அடையுங்கள்.

ஓம் சாந்தி! நாம் மாணவர்கள் என குழந்தைகள் புரிந்து கொள்கிறீர்கள். தந்தையின் மாணவர்கள் என்ன படித்துக் கொண்டிருக்கிறீர்கள். நாம் மனிதனிலிருந்து தேவதையாவதற்காக டியூசன் படித்துக்கொண்டிருக்கிறோம். ஆத்மாக்களாகிய நாம் பரமபிதா பரமாத்மாவிடம் டியூசன் கற்றுக் கொண்டிருக்கிறோம். பல பிறவிகளாக தன்னை ஆத்மா என்று உணராமல் தேகம் என்று நினைத் திருந்தோம் என்பதை இப்போது புரிந்து கொண்டோம். லௌகீக தந்தை டியூசனுக்காக வேறு இடத்திற்கு அனுப்புகிறார்; சத்கதியடைவதற்காக இன்னொரு இடத்திற்கு அனுப்புகிறார். தந்தைக்கு வயதாகிவிட்டால் வானப்பிரஸ்த நிலையில் போக வேண்டும் என மனம் விரும்புகிறது. ஆனால் வானப்பிரஸ்தம் என்பதன் பொருளை யாரும் அறியவில்லை. சப்தத்திலிருந்து விடுபட்டு நாம் எப்படி போக முடியும்? புத்தியில் ஏறுவதில்லை. இப்போது நாம் பதீதர்களாக இருக்கிறோம். ஆத்மாக்களாகிய நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கே நீங்கள் தூய்மையாக இருந்தீர்கள். இங்கே வந்து நடிப்பை நடித்து நடித்து பதீதமாகியிருக்கிறீர்கள். இப்போது மீண்டும் தூய்மையாக யார் மாற்றுவார்கள்? பதீத பாவனா என யார் அழைக்கிறார்கள்? குருவை யாரும் பதீதபாவனர் என கூறமாட்டார்கள். குருவைப் பின்பற்றுகின்றனர். இருப்பினும் ஒருவரிடம் முழு நிச்சயம் ஏற்படுவதில்லை. ஆகையால் நம்மை தன்னுடைய வீடு மற்றும் வானபிரஸ்த நிலையை அடைய வைப்பதற்கான குரு யாராவது கிடைக்க மாட்டார்களா என தேடுகின்றனர். அதற்காக மிகவும் யுக்திகளைப் படைக்கின்றனர். எங்காவது யாருடைய மகிமையாவது கேட்டால் அங்கே செல்கிறார்கள். யார் இந்த மரத்தினுடைய நாற்றாக இருப்பார்களோ அவர்களுக்கு உங்களுடைய ஞான அம்பு பாய்கிறது. இது தெளிவான விஷயம் என புரிந்து கொள்கின்றனர். உண்மையில் நீங்கள் வானபிரஸ்த நிலையில் செல்கிறீர்கள் அல்லவா! எதுவும் பெரிய விஷயம் இல்லை. டீச்சருக்கு பள்ளிக்கூடத்தில் படிக்க வைப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. பக்தர்களுக்கு என்ன வேண்டும்? குழந்தைகளாகிய நீங்கள் இந்த நாடகச் சக்கரத்தை நன்றாக புரிந்து கொண்டீர்கள். தந்தை தான் ஆஸ்தியை கொடுத்தார், இப்போது கொடுத்துக்

கொண்டிருக்கின்றார். மீண்டும் அந்த நிலையில் வருவோம் என்பதையெல்லாம் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். முதல் முக்கியமான விஷயம் தூய்மையாக மாறுவதற்கு தந்தையை நினைக்க வேண்டும். லௌகீக தந்தை அனைவருக்கும் நினைவிருக்கிறது. பரலௌகீக தந்தையை யாரும் அறிய வில்லை. இப்பொழுது தன்னை ஆத்மா என்று உணர்ந்து தந்தையை நினைவு செய்வது எளிதிலும் எளிதான விஷயமும் கூட, அதே நேரத்தில் கடினத்திலும் கடினமும் கூட என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள்.

ஆத்மா எவ்வளவு சிறிய நட்சத்திரமாக இருக்கிறது. தந்தையும் நட்சத்திரமாக இருக்கிறார். அவர் சம்பூர்ண பவித்திர ஆத்மா. மேலும் இவர் (பிரம்மா) சம்பூர்ண அபவித்திரமானவர். சம்பூர்ண பவித்திர சங்கத்தின் நட்சத்திரங்கள்; ஒருவருடைய சங்கம் தான் கிடைக்கிறது. நிச்சயம் சங்கம் வேண்டும். பிறகு ஐந்து விகாரம் என்ற இராவணனின் கெட்ட சங்கமும் கிடைக்கிறது. அவர்களை இராவண சம்பிரதாயம் என கூறப்படுகிறது. இப்பொழுது நீங்கள் இராம சம்பிரதாயத்தை சார்ந்தவர் களாக மாறிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இராம சம்பிரதாயத்தைச் சார்ந்தவராக மாறிய பிறகு இந்த இராவண சம்பிரதாயம் இருக்காது. இந்த ஞானம் புத்தியில் இருக்கிறது. இராமர் என்று பகவானை கூறுகிறோம். பகவான் தான் வந்து இராம இராஜ்யத்தை ஸ்தாபனை செய்கிறார். அதாவது சூரியவம்ச இராஜ்யத்தை ஸ்தாபனை செய்கிறார். இராம இராஜ்யம் என்று கூட கூற முடியாது, ஆனால் இராம இராஜ்யம், இராவண இராஜ்ஜியம் என்று கூறி புரிய வைக்கும் போது எளிதாக இருக்கிறது. உண்மையில் சூரிய வம்சத்தின் இராஜ்யம் வைரம் போன்ற வாழ்க்கையை எப்படி உருவாக்கிக் கொள்வது என்று சிறிய புத்தகம் கூட உங்களுடையது இருக்கிறது. இப்போது வைர வாழ்வு என்று எதை கூறுகின்றோம் என்பதை உங்களைத் தவிர மனிதர்கள்; அறியவில்லை. வைரம் போன்ற தேவதைகளின் வாழ்க்கையை எப்படி உருவாக்கிக் கொள்வது என்பதை எழுத வேண்டும். தேவதை என்ற வார்த்தையைச் சேர்க்க வேண்டும். நாம் வைரம் போன்ற வாழ்க்கையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் உணருகின்றீர்கள். பாபாவைத் தவிர வேறு யாரும் மாற்ற முடியாது. புத்தகம் நன்றாக இருக்கிறது. அதில் இந்த வார்த்தையைச் சேருங்கள். எந்த செலவும் இல்லாமல் நீங்கள் அசுர சோழி வாழ்க்கையிலிருந்து வைரம் போன்ற தேவதைகளினுடைய ஜன்மத்தை ஒரு வினாடியில் அடையலாம். குழந்தை தந்தையிடம் பிறந்த உடனேயே ஆஸ்திக்கு உரிமையாளர் ஆகிறார்கள். குழந்தைகளுக்குச் செலவாகிறதா என்ன? மடியில் வந்தார்கள் சொத்துக்கு உரிமையாளர் ஆகின்றர்கள்; தந்தை தான் செலவு செய்கிறார்; குழந்தை செய்வதில்லை. இப்போது நீங்கள் என்ன செலவு செய்தீர்கள். தந்தையினுடைய வராவதில் ஏதாவது செலவு இருக்கிறதா? இல்லை. லௌகீக தந்தையினுடையவராவதில் செலவு இல்லாதது போலவே பாரலௌகீக தந்தையினுடையராக இருப்பதிலும் கூட எந்த செலவும் இல்லை. இங்கே தந்தை வந்து படிக்க வைக்கிறார். படிக்க வைத்து, உங்களை தேவதையாக மாற்றுகின்றார். நீங்கள் ஒன்றும் சிறிய குழந்தை கிடையாது; பெரியவர்கள். தந்தையினுடைய வராக மாறியதிலிருந்து தந்தை கட்டளை கொடுக்கின்றார். நீங்கள் உங்களுடைய இராஜ்யத்தை ஸ்தாபனை செய்ய வேண்டும். இதில் நிச்சயம் தூய்மையாக வேண்டும். செலவு ஒன்றுமே கிடையாது. கங்கைக்கு செல்கிறார்கள்; தீர்த்த ஸ்தலங்களுக்கு நீராட செல்கின்றார்கள் என்றால் செலவு செய்வார்கள் அல்லவா? உங்களுக்கு

பாபாவின் மீது நிச்சயம் ஏற்பட்டது, செலவானதா என்ன? உங்களிடம் சென்டருக்கு வருகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு தந்தையை நினைவு செய்யுங்கள்; எல்லையற்ற தந்தையிடமிருந்து ஆஸ்தியை அடையுங்கள் என கூறுகின்றீர்கள். தந்தை அல்லவா! என்னுடைய ஆஸ்தி உங்களுக்கு வேண்டும் என்றால் பதீதத்திலிருந்து பாவனமாகுங்கள், பாவனமான உலகிற்கு எஜமானன் ஆகலாம் என தந்தையே கூறுகின்றார். தந்தை வைகுண்டத்தை ஸ்தாபனை செய்கின்றார் என்பது கூட உங்களுக்குத் தெரியும். புத்திசாலி குழந்தைகள் நன்கு புரிந்து கொள்கிறார்கள். அந்த படிப்பில் எவ்வளவு செலவு ஏற்படுகிறது? இங்கே செலவு எதுவும் இல்லை. நாம் அழியாதவர்கள் இந்த சரீரம் அழிந்து போகும் என ஆத்மா கூறுகிறது. குழந்தை குட்டி அனைவரும் அழிந்து விடுவார்கள். சரி, பிறகு இவ்வளவு பைசா சேர்த்து வைத்திருப்பதை என்ன செய்வார்கள். கவலையிருக்குமல்லவா! சிலர் பணக்காரர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு இல்லை என்பதே இல்லை. ஞானம் கிடைக்கிறது என்றால் இந்த நிலையில் பணத்தை என்ன செய்வது என நினைப்பார்கள்? படிப்பு தான் வருமானத்திற்கான ஆதாரம். ஆப்ரகாம் லிங்கம் இருந்தார். மிகவும் ஏழையாக இருந்தார். இரவெல்லாம் கண் விழித்து படித்தார். படித்து படித்து பிரசிடென்ட் ஆகும் அளவிற்கு புத்திசாலியாகி விட்டார். செலவானதா என்ன! எதுவுமில்லை என பாபா கூறியிருக்கிறார். நிறைய பேர் ஏழைகளாக இருக்கின்றனர். அவர்களிடம் அரசாங்கம் படிப்பதற்காக பணம் வாங்குவதில்லை. இது போன்று நிறைய பேர் படிக்கின்றார்கள். கட்டணம் எதுவும் இல்லாமல் பிரசிடென்ட் ஆகிவிடுகின்றார்கள். எவ்வளவு பெரிய பதவி அடைந்து விட்டனர். இந்த அரசாங்கம் கூட எந்த கட்டணமும் வாங்குவதில்லை. உலகத்தில் அனைவரும் ஏழைகளாக இருக்கின்றனர் என புரிந்திருக்கிறது. எவ்வளவு தான் பெரிய பணக்காரர்களாகவோ, லட்சாதிபதியாகவோ, கோடீஸ்வரராகவோ இருக்கிறார்கள். அவர்களும் ஏழைகள் என்றே கூறுகின்றார்கள். நாம் அவர்களை பணக்காரர்களாக மாற்றுகின்றோம். எவ்வளவு தான் செல்வம் இருந்தாலும் இன்னும் சில நாட்களுக்குத்தான் என்பது உங்களுக்குத் தெரியும். இவை அனைத்தும் மண்ணோடு கலந்துவிடும். ஏழைகள் தானே! அனைத்து பதவியும் படிப்பின் அடிப்படையில் தான். தந்தை குழந்தைகளிடம் படிப்பிற்காக என்ன வாங்குவார்? தந்தை உலகித்திற்கே எஜமானராக இருக்கிறார். நாம் எதிர்காலத்தில் இவ்வாறு மாறுவோம் என குழந்தை களுக்குத் தெரியும். நான் இதை ஸ்தாபனை செய்வதற்காகத்தான் வந்திருக்கின்றேன். பேட்ஜில் இந்த விளக்கம் இருக்கிறது. புதிது புதிதாக கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றனர். நம்முடைய ஆத்மாவில் அனைத்து நடிப்பும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என சிவபாபா கூறுகிறார். யார் விகாரி பதீதமாகியிருக்கிறார்களோ அவர்களை தந்தை பாவனமாக்குகின்றார். 5000 ஆண்டுகளுக்கு முன்பு தந்தையிடம் விஷ்வ இராஜ்ய பதவியை அடைந்தீர்கள் என நீங்கள் அறிந்துள்ளீர்கள். முக்கியமான விஷயம் என்னை நினையுங்கள் என பாபா கூறுகின்றார். எதிரில் கூறுகின்றார். ரதம் கிடைத்து விட்டதால் தந்தையும் வந்துவிட்டார். ரதம் என்று ஒன்று நிச்சயிக்கப்பட்டு இருக்கும் அல்லவா! இது ஏற்கனவே நிச்சயிக்கப் பட்ட நாடகம். எதுவும் மாறாது. இந்த வியாபாரி எவ்வாறு பிரஜாபிதா பிரம்மா ஆனார் என கூறுவார்கள். இவர் வியாபாரியாக இருந்தார் என நினைக்கின்றனர். வைரத்தில் ஒன்று போ-யானது, மற்றொன்று உண்மை! இதில் உண்மையான வைரத்தை பாபா கொடுக்கின்றார். பிறகு அது எதற்கு பயன்படும். இது ஞானரத்தினம். இதற்கு முன்பு அந்த வைரங்களுக்கு எந்த விலையும் இல்லை. இந்த ரத்தினம்

கிடைத்ததும் அந்த வைரத்தின் தொழில் எதற்கும் பயனில்லை என புரிந்து கொண்டார். இந்த அழியாத ஞானரத்தினங்கள் ஒவ்வொன்றும் இலட்சக்கணக்கான ரூபாய். உங்களுக்கு எவ்வளவு இரத்தினங்கள் கிடைக்கின்றது. இந்த ஞானரத்தினங்கள் தான் உண்மையாகிறது. பாபா பையை நிரப்பிக் கொள்வதற்காக இந்த இரத்தினங்களை கொடுக்கின்றார் என அறிகின்றீர்கள். இது இலவசமாகவே கிடைக்கின்றது. செலவு எதுவும் இல்லை. அங்கேயோ சுவர்கள், கூரைகளில் கூட வைர வைடூரியங்கள் பதிக்கப்படுகின்றது. அதற்கு என்ன மதிப்பு இருக்கும். பிற்காலத்தில் தான் மதிப்பு ஏற்படுகிறது. அங்கே வைர வைடூரியங்கள் கூட உங்களைப் பொறுத்தவரை பெரியதொன்றும் இல்லை. குழந்தைகளுக்கு நிச்சயம் வேண்டும்.

இவர் ரூபமாகவும் (ஞானம்) இருக்கின்றார். பசந்த் (நடைமுறை தாரணையின் வெளிப்பாடு) ஆகவும் இருக்கின்றார். தந்தையினுடையது சிறிய ரூபம். அவரை ஞானக்கடல் என்கிறார்கள். அவரிடமிருந்து ஞானரத்தினங் களால் நீங்கள் மிகவும் செல்வந்தராக ஆவீர்கள். மற்றபடி எந்த ஒரு அமிர்தம் அல்லது தண்ணீரினுடைய மழை பொழிவதில்லை. படிப்பில் தண்ணீரினுடைய விஷயம் இல்லை. தூய்மையாவதில் செலவு எதுவும் கிடையாது. இப்பொழுது உங்களுக்கு விவேகம் கிடைத்திருக்கிறது. பதீதபாவனர் ஒருவர்தான் என புரிந்து கொள்கிறீர்கள். இப்பொழுது உங்களுடைய யோக பலத்தால் தூய்மையாகிக் கொண்டிருக்கிறீர்கள். தூய்மையாகி தூய்மையான உலகிற்குச் செல்லலாம் என அறிந்திருக்கிறீர்கள். இப்பொழுது இது சரியா? அல்லது அதுவா? இந்த அனைத்து விஷயங்களும் புத்தியில் இருக்க வேண்டும். நாடகத்தில் இந்த பக்தியினுடைய பார்ட் கூட நடக்க வேண்டும். இப்பொழுது நீங்கள் தூய்மையாகி தூய்மையான உலகத்திற்குச் செல்ல வேண்டும் என பாபா கூறுகின்றார். யார் தூய்மையாகின்றார்களோ அவர்களே செல்வார்கள். யார் இந்த இடத்தின் நாற்றாக இருப்பார்களோ அவர்கள் வருவார்கள். மற்றவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். அவர்கள் புதைகுழியில் மாட்டிக் கொண்டேயிருப்பார்கள். பிறகு கடைசியில் கேட்கும் போது ஓ! பிரபு, உன்னுடைய லீலையே.. தாங்கள் பழைய உலகத்தை எப்படி புதியதாக மாற்று கின்றீர்கள் என கூறுவார்கள். உங்களுடைய இந்த ஞானம் செய்தித்தாள்களில் மிக அதிகமாக வெளிவரும். முக்கியமாக இந்த படத்தை செய்தித்தாளில் வண்ணப்படங்களாக போடுங்கள். மேலும் சிவபாபா பிரஜா பிதா பிரம்மா மூலமாக படிக்க வைத்து சொர்க்கத்திற்கு எஜமானன் (லட்சுமி-நாராயணன்) ஆக்குகின்றார் என எழுதுங்கள். எப்படி? நினைவு யாத்திரையினால். நினைவு செய்ய செய்ய உங்களுடைய துரு நீங்கிவிடும். நீங்கள் எழுந்து நின்று இந்த வழியை அனைவருக்கும் சொல்லலாம். அதாவது என்னை மட்டும் தன்னை ஆத்மா என உணருங்கள் என பாபா கூறுகின்றார். அடிக்கடி இந்த நினைவை ஏற்படுத்தி அவர்களுடைய முகம் ஏதாவது மாறுகிறதா எனப்பாருங்கள். கண்களில் நீர் வழிகின்றதா? அப்பொழுது தான் ஏதாவது புத்தியில் பதிந்திருக்கிறது என புரிந்து கொள்ளுங்கள். முதன் முதலில் இந்த ஒரு விஷயத்தை தான் புரிய வைக்க வேண்டும். 5000 வருடத்திற்கு முன்பு கூட என்னை மட்டும் நினையுங்கள் என பாபா கூறினார். சிவதந்தை வந்ததால் தான் சிவஜெயந்தி கொண்டாடுகிறோம் அல்லவா? பாரதத்தை சொர்க்கமாக்க வேண்டுமென்றால் என்னை மட்டுமே நினையுங்கள், நீங்கள் பாவனமாகிவிடுவீர்கள்; என்பதையே புரிய வைத்தார். சிறிய சிறிய குழந்தைகள் கூட இவ்வாறு புரிய வைக்கலாம். எல்லையற்ற தந்தை சிவபாபா

இவ்வாறு புரிய வைக்கின்றார். "பாபா என்ற வார்த்தை மிகவும் இனிமையாக இருக்கிறது. அப்பா மற்றும் ஆஸ்தி. இவ்வளவு நிச்சயத்தோடு குழந்தைகள் இருக்க வேண்டும். இதுவே மனிதனிலிருந்து தேவதையாவதற்கான வித்யாலயம். தேவதைகள் புனித மானவர்களாக இருக்கிறார்கள். இப்போது தன்னை ஆத்மா என்றுணர்ந்து என்னை நினையுங் கள், மன்மனாபவ என பாபா கூறுகின்றார். இந்த வார்த்தையை கேட்டிருப்பீர்கள். கேட்கவில்லை என்றாலும் பாபா சொல்கின்றார். நான் தான் பதீதபாவனன் என்னை நினைவு செய்தால் உங்களுடைய துரு நீங்கி விடும், சதோபிரதானமாகிவிடுவீர்கள் என பாபா கூறுகின்றார். இதில் தான் உழைப்பு இருக்கிறது. ஞானத்தைப் பொருத்தவரை அனைவருக்கும் மிக நன்றாக இருக்கிறது. முதல் தரமான ஞானம் என்று கூறுகின்றனர். ஆனால் பழமையான யோக விஷயத்தைப் பற்றி யாரும் அறிவதில்லை. தூய்மையாகும் விஷயத்தை நீங்கள் சொன்னாலும் புரிந்து கொள்வதில்லை. நீங்கள் அனைவரும் பதீதமாக தமோபிரதானமாகி விட்டீர்கள் என பாபா கூறுகின்றார். இப்போது தன்னை ஆத்மா என உணர்ந்து என்னை நினையுங்கள். உண்மையில் ஆத்மாக்களாகிய நீங்கள் என்னுடன் இருந்தீர்கள் அல்லவா? ஓ! இறை தந்தையே வாருங்கள் என என்னை அழைக்கிறீர்கள். இப்பொழுது நான் வந்திருக்கிறேன் என்னுடைய வழிப்படி செல்லுங்கள். இதுதான் பதீதத்திலிருந்து பாவனமாவதற்கான வழி. நான் தான் சர்வசக்திவான். சதா தூய்மையானவர். இப்பொழுது நீங்கள் எனனை நினையுங்கள். இதற்குத் தான் பழமையான இராஜயோகம் என்று பெயர். நீங்கள் தொழில், வேலை போன்றவைகளில் கூட ஈடுபடுங்கள். குழந்தைகளைக் கூட பார்த்துக் கொள்ளுங்கள் ஆனால் புத்தியோகத்தை மட்டும் அனைத் திலிருந்தும் விலக்கி என்னுடன் இணையுங்கள். இது தான் அனைத்தையும் விட முக்கியமான விஷயம். இதைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் எதையும் புரிந்து கொள்ளவில்லை. ஞானத்தைப் பொறுத்தவரை மிகவும் நன்றாக ஞானம் கொடுக்கிறீர்கள். தூய்மையும் நன்றாக இருக்கிறது. ஆனால் நாம் எவ்வாறு தூய்மையாவது என கூறுகின்றனர். எப்பொழுதுமே இந்த விஷயத்தைப் புரிந்து கொள்வதில்லை. தேவதைகள் எப்பொழுதும் தூய்மையாக இருந்தார்கள் அல்லவா? அவர்கள் எப்படி மாறினார்கள். இந்த விஷயத்தை முதன் முதலில் புரிய வைக்க வேண்டும். என்னை நினையுங்கள் என பாபா கூறுகின்றார். நினைவினால் தான் பாவங்கள் அழியும் நீங்கள் தேவதையாக மாறலாம். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தன்னை ஏழையிலிருந்து செல்வந்தராக மாற்றிக் கொள்வதற்காக தந்தையிடமிருந்து அழியாத ஞானரத்தினங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த ஒவ்வொரு ரத்தினமும் லட்சக் கணக்கான ரூபாய். இதனுடைய மதிப்பை புரிந்து கொண்டு படிப்பை படிக்க வேண்டும். இந்த படிப்பு தான் வருமானத்திற்கான ஆதாரம். எனவே உயர்ந்த பதவியை அடைய வேண்டும்.

2. இராம சம்பிரதாயத்தில் வருவதற்காக சம்பூர்ண பவித்திரமான

(முழுமையான தூய்மை) ஒரு தந்தையின் சங்கத்தில் இருக்க வேண்டும். கெட்ட சங்கத்திலிருந்து சதா விலகியிருக்க வேண்டும். எல்லா வற்றிலிருந்தும் புத்தியோகத்தை விலக்கி ஒரு தந்தையுடன் இணைக்க வேண்டும்.

வரதானம் : சக்தி சா-யான நினைவின் மூலமாக நொடியில் பல மடங்கு வருமானத்தை சேமிப்பு செய்யக் கூடிய பல மடங்கு பாக்கியசா-ஆவீர்களாக!

தங்களுடைய நினைவு மிகவும் சக்திசா-யாக இருக்கும்போது ஒரு நொடி நினைவின் மூலம் பல மடங்கு வருமானம் சேமிப்பு ஆகும். யாருடைய ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு ஏற்படும் பொழுது, எவ்வளவு பல மடங்கு சேமிப்பாகும், இவர்களுக்குத் தான் பல மடங்கு பாக்கியசா-யானவர்கள் என கூறப்படுகிறது. யாராவது நன்றாக வருமானத்தை சம்பாதிக்கும்போது அவர் களின் முகத்தின் தோற்றம் வித்தியாசமாக இருக்கும், எனவே தங்களின் முகத்தில் பல மடங்கு வருமானத்தின் போதையை காட்ட வேண்டும். அந்த மாதிரியான ஆன்மீக போதை, ஆன்மீக மகிழ்ச்சி இருக்க வேண்டும், இவர்கள் அனைத்திலும் விடுபட்டவர்களாக உள்ளனர் என்ற அனுபவம் செய்ய வேண்டும்.

சுலோகன்: நாடகத்தில் அனைத்தும் நன்மைக்காகவே உள்ளது, இந்த நினைவின் மூலம் கவலையற்ற ராஜாவாக இருங்கள்.